சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:07.02.2023

வா.சா.1 – பவுன்ராஜ் த/பெ – பெருமாள்சாமி

**<u>சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு 7ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

காளியப்ப நாயக்கர் எனது தாத்தா. அவருக்கு இரண்டு குழந்தைகள் அவர்கள் பெயர் பெருமாள்சாமி, செல்லம்மாள். எனது தாத்தா 1972ல் இறந்துவிட்டார். எனது தாத்தா காளியப்ப நாயக்கர் இறப்புச் சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து காளியப்ப நாயக்கருக்கு பூர்வீகமாகபாத்தியப்பட்டு பின்பு எனது தந்தைக்கு பாத்தியம் என்றால் சரிதான். எனது தாத்தா உயிலோ, செட்டில்மெண்டோ எழுதி வைக்கவில்லை என்று சொன்னால் எனக்கு தெரிந்தவரை எழுதி வைக்கவில்லை. அவ்வாறு உயிலோ, செட்டில்மெண்டோ எழுதி வைக்காத பட்சத்தில் செல்லம்மாளுக்கும் தாவா சொத்தில் பங்கு உள்ள நிலையில் அவரை ஏன் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 7ம் பிரதிவாதி சொத்துக்களை வாங்கிய பின்பு பெறப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2ல் என்தாத்தா பெயர் காளிமுத்து நாயக்கர் என்றுதான் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3ல் உள்ள சர்வே எண்73, 5A1A, சொத்தை ஏன் வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அந்த சொத்தை ஏற்கனவே விற்றுவிட்டதால் சேர்க்கவில்லை. அந்த சொத்தை என் அத்தையை தவிர மற்ற குடும்ப உறுப்பினர்கள் சேர்ந்து விற்றோம். தாவா சொத்துக்கள் கூட்டாக பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்கக்கூடிய ஆவணம் அந்த கிரையப்பத்திரம் தான் என்றால் சரிதான். மேற்படி கிரைய பத்திரத்தை இவ்வழக்கில் தாக்கல்

செய்யவில்லை. அந்த சொத்து கூட்டாக பாத்தியப்பட்டது இல்லை என்பதால் தான் அந்த கிரையப்பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அமைப்பு கிழமேலாக இருக்கும். தாவா சொத்தின் விவரங்களை 1943ம் வருட என் தாத்தா பெயரிலான கிரைய பத்திரத்தில் இருந்து எடுத்தேன். அந்த பத்திரத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. 1943ம் வருட பத்திரத்தில் தாவா சொத்தின் பைமாஸ் எண் குறிப்பிடவில்லை சர்வே எண் குறிப்பிட்டிருந்தது. வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்களில் காட்டப்பட்டுள்ள சொத்தை தான் நான் தாவா சொத்தாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.7ல் 1ம் இலக்க சொத்தாக காண்பிக்கப்பட்ட சொத்திற்கு நான்கு மால் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அப்படியெனில் தாவா 1 ,2 இலக்க சொத்துக்களுக்கு சேர்த்து எவ்வாறு நான்கு மால் குறிப்பிட்டேன் என்றால் ஒரு சொத்துக்கு நான்கு மால் இல்லை 60/3 சொத்திற்கு மட்டும் நான்கு மால் உள்ளது. தாவா சொத்து விவரத்தை சீர்திருத்தம் செய்ய நான் எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். என் உடன் பிறந்தவர்களுக்கு தெரிந்து தான் வா.சா.ஆ–7,8 எழுதினோம் அதில் அவர்கள் சாட்சி கையொப்பம் செய்துள்ளனர். தற்போதும் 7ம் பிரதிவாதி அனுபவத்தில் தான் தாவா சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். பிராது சொத்துக்களை 20.11.2018ம் தேதி நான் எனது குடும்ப பெரியோர்களுடன் சென்று 1ம் பிரதிவாதியிடம் பிராது சொத்துக்கள் குறித்து எழுதப்பட்ட ஆவணங்களை ரத்து செய்து பிராது சொத்தில் எனக்குரிய 1/5 பாகத்தை கேட்டதாக சொல்லியுள்ளேன் யார் அந்த குடும்ப பெரியோர்கள் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களை என் குடும்ப உறுப்பினர்கள் சேர்ந்து

விற்பனை செய்துள்ள சூழ்நிலையில் எதை வைத்து 1 மற்றும்5 முதல் 7 பிரதிவாதிகள் என்னை ஏமாற்றினார்கள் என்று நான் கூறுகிறேன் என்றால் அந்த விற்பனை பத்திரத்தில் நான் கையொப்பம் செய்யவில்லை. தாவா சொத்துக்கள் கூட்டுகுடும்ப சொத்தாக இருப்பதால் எதனடிப்படையில் என் பாகத்தை பொறுத்து என்று விளம்புகை பரிகாரம் கேட்கிறேன் என்றால் தாவா சொத்தில் எனக்கும் பாகம் உள்ளது. ஆனால் அது எந்த பகுதியில் என்று எனக்கு தெரியாது. விளம்புகை பரிகாரம் கோராமல் நான் பாகம் கோரமுடியாது என்றால் சரியல்ல. 7ம் பிரதிவாதி கூட்டுகுடும்ப சொத்தில் பாகஸ்தர் இல்லை என்பதால் அவரை வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் மதிப்பு தற்போது உயர்ந்துள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் வழக்கில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய் என்றும் சொத்து விவரம் எனக்க சரிவர தெரியாது என்றும் அதனால் தான் நீதிமன்ற கட்டண சட்டம் பிரிவு 40ல் செலுத்தாமல் தேவையற்ற பிரிவில் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் சட்டப்படியும், நீதிமன்ற நடைமுறைப்படியும் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.